# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 18555/F/2023**

திரு.விநாயகமூர்த்தி .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கும்பகோணம்) லிமிட்,
27, புகைவண்டி நிலைய புதுச்சாலை,
கும்பகோணம்-612001. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.விநாயகமூர்த்தி அவர்கள் ஆஜராகவில்லை. இந்நிலையில் மனுதாரர் தன்னால் நேரடி விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலையில் இருப்பதாகவும் மேலும் திருச்சி அல்லது புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக RTI காணொலி விசாரணைக்கு வாய்ப்பளிக்க வேண்டியும் ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுதகவல் அலுவலர் திரு.M.சுரேஷ்குமார், துணை மேலாளர், பெரியமிளகுபாறை, மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலை, திருச்சி அவர்கள் ஆஜரானார் இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 26/07/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் கும்பகோணம் மண்டலம்-2 துணை மேலாளர் பணியாளர் மற்றும் சட்டம் திரு.R.ரெங்கராஜ் பெரியமிளகுபாறை கலெக்டர் ஆபிஸ் ரோடு, திருச்சி-1 மேற்படி

அலுவலகத்தில் பணியில் சேர்ந்த நாள் முதல் பார்வையிட்டு நகலெடுக்க அனுமதி வழங்கும் நாள் வரை அவர் கையொப்பமிட்ட கோப்புகள் ஒருவர் துணையுடன் பார்வையிட்டு நகலெடுக்க அனுமதி வழங்குவது என்பன போன்ற 5 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 23.09.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தகவல் கிடைக்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 19(1)ன் கீழ் 31.07.2023 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 19.10.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார் இருப்பினும் மனுதாரர் தனக்கு முழுமையான தகவல் கிடைக்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழான 21.10.2023 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து கடித எண். 19.10.2023 தேதியிட்ட கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆணையத்தின் பார்வைக்கு சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

**மனுதாரர் நேரடி விசாரணைக்கு ஆஜராக இயலாத நிலையில் இருப்பதால் காணொலி காட்சி மூலம் விசாரணை செய்ய அனுமதி கோரி ஆணையத்திற்கு கடிதம் அனுப்பியதன் அடிப்படையில் இவ்வழக்கின் விசாரணை எதிர்வரும் மாதங்களில் காணொலி விசாரணைக்கு ஆஜராக மனுதாரர் மற்றும் பொதுதகவல் அலுவலர் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்படும் என இவ்வாணையம் ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 18555/F/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கும்பகோணம்) லிமிட்,
27, புகைவண்டி நிலைய புதுச்சாலை,
கும்பகோணம்-612001.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.விநாயகமூர்த்தி,
32, குமாரபவனம், சிதம்பர நகர்,
மாத்தூர் தொழிற்பேட்டை அஞ்சல்,
புதுக்கோட்டை- 622515.`

Copy to file: KR/PA

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005